இசங்களை
முறியடிக்கும்
இஸ்லாம்

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 FEBRUARY

மலர்: 10 இதழ் : 5 பிப்ரவரி 2017 விலை: ரூ. 5

## உலக அழிவுக்கு முன்...

- மேற்கில் சூரியன் உதித்தல்
- தஜ்ஜாலின் வருகை
- ஏசுநாதரின் இரண்டாம் வருகை
- யஃஜூஜ், மஃஜூஜ் வருகை
- மூன்று பெரும் பூகம்பங்கள்
- எமன் நாட்டுப் பெருநெருப்பு



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2017 FEBRUARY**

**மலர்: 10 இதழ் : 5 பிப்ரவரி 2017 விலை: ரூ. 5**

## பொருளடக்கம்

*இசங்கள் அனைத்தையும் முறியடிக்கும் இஸ்லாம்! -2*
*உலக அழிவுக்கு முன்வரும் அறிகுறிகள் -6*
*மாபெரும் பத்து அடையாளங்கள் -8*
*இப்படி ஒரு ஆட்சியாளர் வருவாரா? -9 .*
*தஜ்ஜாலின் வருகை -10.*
*ஏசுநாதரின் இரண்டாம் வருகை -11*
*யஹ்ஜூஜ், மஹ்ஜூஜ் வருகை -13*
*அந்த நாள் நிகழ்வுகள் - திருக்குர்ஆனில் -15*
*இறுதித் தீர்ப்பு நாளில் விசாரணை -16*
*அநியாயங்கள் பழி தீர்க்கப்படும் நாள் -17*
*திருடிய பொருளே மாலையானால்? -19*
*மதீனாவின் வீதிகளில் மது ஆறு -20*
*ஓலைப்பாயில் உறங்கிய தலைவர்- 21*
*இறை தண்டனையைப் பெற்றுத்தரும் மது! -22*
*மது மற்றும் போதைப் பிரியர்கள் கவனத்திற்கு... -24*

● நீங்கள் அனைவரும் அவனிடமே மீண்டு செல்ல வேண்டியிருக்கிறத் அல்லாஹ்வின் வாக்குறுதி மெய்யானது ~ நிச்சயமாக அவன்தான் முதல் முறையாகப் படைத்தவன் இறைவிசுவாசம் கொண்டு நேர்மையான முறையில் நற்கருமங்கள் செய்தவர்களுக்கு கூலி வழங்குவதற்காக படைப்பினங்களை மீண்டும் உயிர்ப்பிப்பான். யார் நிராகரித்து விட்டார்களோ அவர்களுக்கு அவர்கள் நிராகரித்த காரணத்தினால் கொதிக்கும் நீரும் நோவினைத் தரும் வேதனையும் உண்டு. (திருக்குர்ஆன்)

(அல்லாஹ் என்றால் ‘வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்‘ என்பது பொருள்)


Published from:

**House of Peace,**
PO Box no. 1726, No.501, 3rd cross, Syed Block,
AS palya Bangalore 560017
**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# இசங்கள் அனைத்தையும் முறியடிக்கும் இஸ்லாம்!


பகுத்தறிவு என்னும் ஆறாம் அறிவைக்கொண்டு விண்ணையும், மண்ணையும் பற்றி சிந்திக்கத் துவங்கிய மனிதன், மனிதனாகிய தன்னைப்பற்றியும் சிந்திக்க துணிந்தான்.






ஆம்! சார்லஸ் டார்வின், சிக்மண்ட் பிராய்டு, ஹெகல், கார்ல் மார்க்ஸ் போன்ற மேற்குலக சிந்தனையாளர்களும் இன்ன பிறரும் மனிதனின் குணாதிசயங்களை புரிந்து கொள்வதற்காக அவனை பல்வேறு கோணகளில் சிந்தித்தனர். அவர்களின் இந்த தேடல் எங்கு கொண்டு சென்றது?

ஒருவர் உடலும் உயிரும் கலந்த மனிதனின் வெறும் உடலைபற்றி மட்டும் சிந்தித்ததால், அதன் முடிவும் உடலை மையமாக வைத்தே இருந்தது.. மற்றொருவர் நம் உடல் உறுப்பில் ஒன்றான வயிற்றை மையமாகக் கொண்டு சிந்தித்ததால், மனிதன் எதிர்கொள்ளும் அனைத்து சிக்கல்களுக்கும் காரணம் பசிதான் காரணம் என்ற முடிவுக்கு வந்தார். ஆகவே இந்த பசியை போக்கிவிட்டால் அனைத்து சிக்கல்களும் தீர்ந்துவிடும் என்றார் அவர். மற்றொருவரோ, மனிதனுடைய உருவத்திற்கும், அவனுடைய பாவனைக்கும் ஒத்த மிருகம் ஒன்றைக்காட்டி, அந்த மிருகத்தில் இருந்துதான் மனிதன் பரிணாமம் பெற்றான் என்றார். இன்னுமொருவரோ, மனிதனின் பாலியல் உணர்வுகளை பற்றி சிந்தித்து, மனிதனுடைய அனைத்து தேவைகளுக்கும் காரணம் அவனது காம உணர்வுதான் என்றார். இந்த பாலியலின் மீதுள்ள கட்டுபாடுகளை நீக்கிவிட்டால் அனைத்தும் சரியாகிவிடும் என்றார்.



இன்னும் ஒருவரோ மனிதனின் உடல் மற்றும் அவனுடைய இன்னபிற தேவைகளைக் காட்டிலும் ஆன்மீகத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து சிந்தித்ததன் விளைவாக மனிதன் ஆன்மீகத்திற்குள் புகுந்துவிட்டால் அனைத்தும் சீராகிவிடும் என்றார்..

இவ்வாறு சிந்தித்தவர்கள் தாங்கள் அடைந்த முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு வாழ்க்கை சித்தாந்தங்களையும் கோட்பாடுகளையும் இயற்றினார்கள். இன்னும் சிலர் நாட்டை, மொழியை, இனத்தை அடிப்படையாகக்கொண்ட கோட்பாடுகளையும் வகுத்தார்கள். அவற்றை உருவாக்கியவர்களின் பெயர்களோடு இணைத்து "இசங்களாக" அறிமுகப் படுத்தினார்கள். அவற்றை மக்களிடையே பிரச்சாரம் செய்து அவற்றின்பால் மக்களை ஈர்த்தார்கள். மனிதவாழ்வின் தற்காலிக பாதிப்புகளுக்கும் உணர்ச்சிக் கொந்தளிப் புகளுக்கும் உள்ளான மக்கள் பலரும் அவற்றுக்கான தீர்வு தேடியும் தற்காலிக இன்பங்களுக்காகவும் இன்னபிற காரணங்களுக்காகவும் அவற்றின்பால் ஈர்க்கப்பட்டு விட்டில் பூச்சிகளைப் போல் அவற்றில் சென்று விழுந்தார்கள். இன்னும் விழுந்துகொண்டு இருக்கிறார்கள்!



## மனிதன் என்ற அற்புத ஜீவி

ஆனால் அதிபக்குவம் வாய்ந்த அறிவாற்றலும் நுணுக்கங்களும் தன்னகத்தே

கொண்ட தானியங்கி இயந்திரம் போன்றது மனித உடல். எந்த ஒரு மனிதனாலும் மனிதக் குழுக்களாலும் புரிந்துகொள்ள முடியாத சிக்கல்கள் நிறைந்தது அது. இப்பரந்துவிரிந்த மாபெரும் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் இந்த மனிதன் என்ற அற்புத ஜீவியை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டு இயங்கி வருவதையும் நாம் காணலாம். உதாரணமாக நாம் வாழும் இந்த பூமியின் சுழற்சி வேகம், சூரியனுக்கும் பூமிக்கும் இடைப்பட்ட தூரம், இரவுபகல் மாற்றம், காற்றுமண்டல அழுத்த அளவு போன்ற நாம் அறிந்தும் அறியாததுமான பற்பல காரணிகள் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டு உள்ளதால்தானே இங்கு மனிதவாழ்வு என்பது சாத்தியமாகிறது? இவற்றில் ஏதாவது மீறப்பட்டாலும் அடுத்த நொடியே அனைத்தும் தகர்ந்துவிடும் என்பதை நாம் அறிவோம். அப்படியானால் மனிதன் என்ற பேரற்புதத்தைப் படைத்து அவனுக்காகவே இம்மாபெரும் பேரண்டத்தை உருவாக்கி அவனுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்து வரும் அந்த படைப்பாளன் நமக்கு வழங்கும் வாழ்வியல் சித்தாந்தத்தை நாம் புறக்கணிக்க முடியுமா?

இறைவனால் படைக்கப்பட்ட நாம் அந்த சர்வவல்லமை கொண்டவனும் நுண்ணறிவாளனும் ஆன இறைவன் வழங்கும் வழிகாட்டுதல்களை புறக்கணித்துவிட்டு அற்பமான அறிவாற்றல் கொண்ட மனிதர்கள் உருவாக்கிய சித்தாந்தங்களின் பின்னால் செல்வது நம் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வையும் தராது. நமக்கு மோட்சத்தையும் பெற்றுத் தராது.

## யானையை ஆராய்ந்த குருடர்கள்

மனிதனை பற்றியும் அவன் வாழும் பிரபஞ்சத்தின் பின்னணி பற்றியும் சரியான புரிதல் இல்லாதவர்கள் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை எப்படிக் கூற முடியும்? அது யானையை தன் கையால் தடவி உணர்ந்த ஆறு குருடர்களின் கதை போல் ஆகாதா? ஒவ்வொருவரும் ஒவ்வொரு உறுப்பினை தடவிப் பார்த்துவிட்டு யானை என்றால் இன்னதுதான் என்று கூறினார்கள். ஒருவர் யானை என்பது தூண் என்றார். மற்றொருவர் யானை என்பது மரக்கிளை, இன்னும் ஒருவர் யானை என்பது கயிறு என்றும் கூறிய கதையை நாம் அறிவோமே.



தான் எவ்வாறு, எதற்கு இவ்வுலகில் வாழவேண்டும் என்பது பற்றிய அடிப்படை அறிவும் விழிப்புணர்வும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அத்தியாவசியமானதாகும். அதற்கான குறைகளற்ற பரிபூரணமான ஒரு வழிகாட்டுதலை இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவன் எவனோ அவனால் மட்டுமே வழங்க முடியும் என்பதே உண்மை. ஆம்! மனிதனின் வாழ்விற்கு ஒரு அர்த்தமும், வழிமுறையும், ஒரு இலக்கையும் கற்பித்தது இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களும் அவர்கள் மூலமாக அனுப்பட்ட வேதங்களுமே! அவ்வாறு இறைவனால் வகுத்து வழங்கப்படும் வாழ்வியல் நெறிமுறைகளையே நாம் சமயம் அல்லது மதம் என்கிறோம். அதுவே இன்று அரபு மொழியில் இஸ்லாம் என்று அறியப்படுகிறது. இவ்வார்த்தையின் பொருள் அமைதி என்பதாகும். இன்னொரு பொருள் கீழ்படிதல் என்பதாகும். அதாவது இறைவனின் எவல்விலக்கல்களை ஏற்று வாழும்போது பெறப்படும்

அமைதிக்குப் பெயர்தான் இஸ்லாம்.

## ஏன் இஸ்லாம்?

ஒரு பொருளை பற்றிய முழுமையான அறிவு அதை தாயரித்தவனுக்குத்தானே இருக்கமுடியும்? நீங்கள் அன்றாடம் பயன்படுத்தும் உங்களுடைய வாகனத்தை சற்று கவனித்து பாருங்கள், அந்த வாகனத்திற்கு தேவையான எரிபொருள் மற்றும் உபரி பாகங்களாக அந்த வாகனத்தின் தாயரிப்பாளர் எதை பரிந்துரை செய்கிறாரோ அதை அப்படியே நாம் பின்பற்றுகிறோம் அல்லவா? அதுவும் எந்த அளவுக்கென்றால் அந்த வாகனத்தின் சக்கரத்திற்கு காற்றழுத்தம் எவ்வளவு புள்ளிகள் இருக்க வேண்டும் என்று வாகனத் தயாரிப்பாளர் பரிந்துரைகிறாரோ அதை அப்படியே மிகச்சரியாக பின்பற்றுகிறோம்.

அதை விடுத்து நாம் “இது என்னுடைய வண்டி, அவன் யார் என்னுடைய வண்டிக்கு இத்தனை புள்ளிகள்தான் காற்றழுத்தம் இருக்க வேண்டும் என்று பரிந்துரைப்பதற்கு?”என்று நாம் யாரும் நினைப்பதும் இல்லை, கேட்பதும் இல்லை. ஏனென்றால் நாம் அந்த வண்டியின் உரிமையாளர் மட்டுமே தவிர அந்த வண்டியை பற்றிய முழு அறிவு நமக்கில்லை என்பதை நன்றாக அறிந்திருக்கிறோம். ஆக யார் இந்த வண்டியை தயாரித்தார்களோ அவர்கள் சொல்வதை கேட்டு அதன்படி செயல்பட்டால் மட்டுமே வண்டி நன்றாக இயங்கும் என்பதை நாம் அறிந்திருகின்றோம்.

ஒரு சின்னஞ்சிறிய பழுது பார்ப்பதாக இருந்தாலும் கூட அந்த வாகனத்தின் தயாரிப்பாளர் சொல்வதை அப்படியே நம்பி செயல்படும் நாம், நம்முடைய வாழ்க்கை வி‘யத்தில் அதே அணுகுமுறையை ஏன் பின்பற்ற மறுக்கிறோம்? செயலாலும் சிந்தனைத்திறனாலும் நுணுக்கத்தாலும் மனிதன் என்ற அற்புதத்தை மிஞ்சிய வேறொரு இயந்திரம் இப்புவியில் இல்லை என்பதை அனுபவபூர்வமாகவே அறிவீர்கள். இந்த அதிபக்குவம் வாய்ந்த மனிதன் என்ற இயந்திரத்தைப் பற்றி முழுமையாக அறிந்தவன் அதைப் படைத்து பரிபாலிப்பவனான இறைவனன்றி வேறு யார்?

## புறக்கணிக்க முடியுமா?

நம்மைப் படைத்ததோடு மட்டுமல்லாமல் நம்மை இடையறாது பரிபாலித்தும் வருகின்ற அந்த இறைவன் தனது வழிகாட்டுதலையும், அறிவுரைகளையும் தனது தூதர்கள் மூலமாகவும் வேதங்கள் மூலமாகவும் மனித குலத்திற்கு அவ்வப்போது வழங்கி வந்துள்ளான். அந்த இறைத்தூதர்கள் தத்தமது காலகட்டங்களில் தத்தமது மக்களிடையே முன்மாதிரி புரு‘ர்களாக நின்று இறைவழிகாட்டுதல்களின் அடிப்படையில் பூமியில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டியும் சென்றுள்ளார்கள்.

அந்த வரிசையில் நாம் வாழும் காலகட்டத்திற்காக அனுப்பப்பட்டவர்தான் முஹம்மது நபி(ஸல்) அவர்கள். அவர்கள் மூலமாக அனுப்பபட்ட வேதமே திருக்குர்ஆன்.

இப்படிப்பட்ட உறுதியான வழிகாட்டுதலைப் புறக்கணித்துவிட்டு நாமாகவே தான்தோன்றித்தனமாக வாழ்வதும் நம்மைப் போன்ற அற்ப அறிவுகொண்ட மனிதர்கள் பரிந்துரைக்கும் வாழ்க்கைப் பாதையை ஏற்பதும் இந்த பூமியில் பற்பல குழப்பங்களுக்கும் அழிவுகளுக்கும் அதர்மத்திற்குமே வழிவகுக்கும். மேலும் இறைவனைப் புறக்கணித்ததற்காக அவனுக்கு நன்றிகேடு செய்ததற்காக மறுமையில் அவனது தண்டனைகளையும் பெற்றுத்தரும் என்பதே உண்மை!

● **இறைவனின் மார்க்கத்தைவிட்டு (வேறு மார்க்கத்தையா) அவர்கள் தேடுகிறார்கள்? வானங்களிலும் பூமியிலும் உள்ள (அனைத்துப்**

**படைப்புகளும்) விரும்பியோ அல்லது வெறுத்தோ அவனுக்கே சரணடைகின்றன மேலும் (அவை எல்லாம்) அவனிடமே மீண்டும் கொண்டு வரப்படும். (திருக்குர்ஆன் 3:83)**

ஆக, படைத்தவனான ஏக இறைவன் ஒருவன் மட்டுமே மனிதனுக்கும் இன்னபிற படைப்பினங்களுக்கும் எது சிறந்தது என்பதைப் பக்குவமாக அறிந்தவன். அவை அனைத்தின் நோக்கங்களையும் அவற்றின் உரிமைகளையும் செயல்பாடுகளையும் பற்றிய முழுமையான அறிவு அவனிடம் மட்டுமே உள்ளது. மட்டுமல்ல, நமது இந்தக் குறுகிய வாழ்க்கையை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்குரிய பரீட்சைக்கூடமாகவும் படைத்துள்ள இறைவன் மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று நமது செயல்பாடுகளை விசாரிக்கவும் செய்வான். நமது பாவபுண்ணியங்கள் அடிப்படையில் சொர்க்கத்தையோ அல்லது நரகத்தையோ நமது நிரந்தர வாழ்விடங்களாக வழங்கவும் உள்ளான். அந்த இறைவன் வழங்கும் வாழ்க்கை நெறியை ஏற்று வாழாதோர் இம்மையில் தற்காலிக சுகங்களை அடைந்தாலும் மறுமையில் பேரிழப்பையே அடைகிறார்கள் என்பதை இறைவன் தன் இறுதிவேதமாம் திருக்குர்ஆனில் உறுதிபடக் கூறுவதைக் காணுங்கள்:

● **இன்னும் இஸ்லாம் அல்லாத (வேறு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் (அது) ஒருபோதும் அவரிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் அ(த்தகைய)வர் மறுமை நாளில் நஷ்டமடைந்தோரில் தான் இருப்பார். (திருக்குர்ஆன் 3:85)**

● **அவன்தான் தன்னுடைய தூதரை நேர்வழியுடனும், சத்திய மார்க்கத்துடனும் அனுப்பி வைத்தான். ஏனைய மார்க்கங்களைவிட அதனை மேலோங்கச் செய்ய வேண்டும் என்பதற்காக. இணைவைப்பாளர்களுக்கு அது எவ்வளவு வெறுப்பாக இருந்தாலும் சரியே! (திருக்குர்ஆன் 61:9)**

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

● இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு **SMS** அனுப்பவேண்டும்.

● மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் **SMS** மூலம் **RESEND QNM** என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.

● முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60- ● ஈராண்டு சந்தா Rs.120-

● இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: **09845373775**

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

# உலக அழிவுக்கு முன்வரும் அறிகுறிகள்

சென்ற இதழில் உலக அழிவுக்கு முன் தென்படும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவித்த சில அறிகுறிகளை கண்டோம். அதன் தொடர்ச்சியாக இன்னும் சில அறிகுறிகள் கீழே:

**எப்படியாவது சம்பாதித்தல்**

● ஒரு காலம் வரும், அப்போது மக்கள் தாங்கள் சம்பாதிப்பவை ஹலாலா ஹராமா? (அனுமதிக்கப்பட்டவையா இல்லையா?) என்பதைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நபி (ஸல்) கூறினார்கள் (நூல் - புகாரீ)

**நெருக்கமான கடை வீதிகள்**

● கடைகள் பெருகி அருகருகே அமைவதும், நியாயத் தீர்ப்பு நாளின் அடையாளம் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர். (நூல்: அஹ்மத்)

**சிலை வணக்கம் செய்வர் முஸ்லிம்கள்!**

● எனது சமுதாயத்தில் உள்ள சில கோத்திரத்தினர் இணைவைப்பர்களுடன் சேராத வரை - அவர்களின் சிலைகளை வணங்காதவரை - மறுமை நாள் ஏற்படாது. மேலும் எனது சமுதாயத்தில் முப்பது பொய்யர்கள் தோன்றுவார்கள். அனைவரும் தம்மை அல்லாஹ்வின் தூதர்கள் என்று வாதிடுவார்கள். நான் நபிமார்களின் முத்திரையாவேன். நிச்சயமாக எனக்குப்பின் எந்த நபியும் கிடையாது என்று நபி (ஸல்) கூறினார்கள்.
அறிவிப்பாளார் : ஸவ்பான் (ரலி) நூல் : திர்மிதீ, அபூ தாவூத்.

**விபச்சாரம், குடி அதிகரிக்கும்!**

● "கல்வி உயர்த்தப்படுவதும், அறியாமை மேலோங்குவதும், விபச்சாரம் பெருகுவதும், மதுபானம் அருந்தப்படுவதும், ஐம்பது பெண்களுக்கு ஓர் ஆண் நிர்வகிக்கும் அளவுக்கு பெண்கள் அதிகமாகி ஆண்கள் குறைவதும் மறுமை நாளின் அடையாளங்களாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : அனஸ் இப்னு பாலிக் (ரலி) நூல் - புகாரீ, முஸ்லிம், அஹ்மத், நஸயீ.

**நிர்வாணி மக்கள் தலைவராக ஆகுதல்**

● செருப்பணியாத, நிர்வாணமாகத் திரிவோர், மக்களின் தலைவர்களாக ஆவதும், மறுமைநாளின் அடையாளங்களாகும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

**செல்வம் பெருகும்.**

● இப்பூமி தனது ஈரல் துண்டை தங்கம், வெள்ளியை தூண்களைப் போல் வாந்தியெடுக்கும் (வெளிப்படுத்தும்) ஒரு திருடன் வந்து 'இதற்காகத்தான் என் கை வெட்டப்பட்டது' என்பான். கொலைக்காரன் வந்து, 'இதற்காத்தான் நான் கொலை செய்தேன்' என்பான். உறவுகளைப் பிரிந்து வாழ்பவன் வந்து, 'இதற்காகத்தான் என் உறவுவினர்களைப் பகைத்தேன்' என்பான் (இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள் என) அவர்களை அழைத்தாலும் அவற்றில் எதனையும் எடுக்க மாட்டார்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஸ்லிம், திர்மிதீ.)

● 'யூப்ரடீஸ் (ஃபுராத்) நதி தங்கப் புதையலை வெளியே தள்ளும். அதைக் காண்பவர்கள் அதிலிருந்து எதையும் எடுக்க வேண்டாம்' என்பதும் நபிமொழி. (நூல் : புகாரி)

● 'நீங்கள் தர்மம் செய்யுங்கள். மக்களிடையே ஒரு காலம் வரும். தன் தர்மப் பொருளை எடுத்துக் கொண்டு செல்வான், ஆனால் அதை வாங்குவோர் எவரும் இருக்கமாட்டார்கள்' என்பதும் நபிமொழி. (நூல்-புகாரீ)

**வாழும் ஆசை அற்றுப் போய் விடும்**

● ஒரு மனிதர், மற்றொரு மனிதரின் மண்ணறையைக் கடந்து செல்லும் போது, அந்தோ நான் அவரின் இடத்தில் (மண்ணறைக்குள்) இருந்திருக்க வேண்டாமா? என்று (ஏக்கத்துடன்) சொல்லும் காலம் வராத வரை மறுமை நாள் வராது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (நூல் - புஹாரி)

**பேசாதவை பேசும்**

● விலங்கினங்கள் மனிதனிடம் பேசும் வரையிலும் தோல் சாட்டையும் செருப்பு வாரும் மனிதனிடம் பேசும் வரையிலும் யுக முடிவு நாள் ஏற்படாது என்பதும் நபிமொழி. (நூல்: அஹ்மத்)

**ஆடை அணிந்தும் நிர்வாணம்**

ஆடை அணிந்தும் நிர்வாணமாகத் தோற்றமளிக்கும் பெண்கள் இனி மேல் தோன்றுவார்கள் என்பதும் நபிமொழியாகும்.( நூல் : முஸ்லிம்)

**பேச்சைத் தொழிலாக்கி சம்பாதித்தல்**

தங்கள் நாவுகளை (மூல தனமாகக்) கொண்டு சாப்பிடக் கூடியவர்கள் தோன்றும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது என்பதும் நபிமொழி. நூல்: அஹ்மத் 1511

**மாபெரும் யுத்தம்**

● இரண்டு மகத்தான சக்திகளுக்கிடையே யுத்தம் நடக்கும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது. அவர்களுக்கிடையே மகத்தான யுத்தம் நடக்கும். இருவரும் ஒரே வாதத்தையே எடுத்து வைப்பார்கள். (நூல் : புகாரி)

**அல்ஜஹ்ஜாஹ் மன்னர்**

● ஜஹ்ஜாஹ் என்ற பெயருடைய ஒரு மன்னர் ஆட்சிக்கு வராமல் உலகம் அழியாது என்பது நபிமொழி. (நூல் : முஸ்லிம் )

**வாரி வழங்கும் மன்னர்**

கடைசிக் காலத்தில் ஒரு கலீஃ.பா (ஆட்சியாளர்) தோன்றுவார். அவர் எண்ணிப் பார்க்காமல் செல்வத்தை வாரி வழங்குவார் என்பது நபிமொழி. (நூல் : முஸ்லிம்)

**மதீனா தூய்மையடைதல்**

● துருத்தி எவ்வாறு இரும்பின் துருவை நீக்குமோ அது போல் மதீனா நகரம் தன்னிடம் உள்ள தீயவர்களை அப்புறப்படுத்தும் வரை யுக முடிவு நாள் வராது என்பது நபிமொழி. (நூல் : முஸ்லிம்)

**கட்டிடம் கட்டுவதில் போட்டி உருவாகும்**

● "மேலும், மக்கள் கட்டிடங்களை (போட்டி போட்டுக் கொண்டு) உயரமாக கட்டாதவரை மறுமை நாள் வராது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) (இது புகாரீயில் இடம் பெறும் ஹதீஸின் ஒரு பகுதி).

**பள்ளிவாசல்கள் பெருமைக்காக அமையும்**

● மக்கள் தங்களுக்குள் பெருமையடித்துக் கொள்ளும் வகையில் பள்ளிவாசலைக் கட்டுவர். இது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும் என்பது நபிமொழி. அறிப்பாளர் - அனஸ் (ரலி) நூல் - நஸயீ.

**இறை நம்பிக்கை (ஈமானில்) தடுமாற்றம்**

● "இறுதிநாளின் ஆரம்பத்தில் (தோன்றுவதற்கு முன்) இரவின் இருள் போல் குழப்பங்கள் ஏற்படும். காலையில் நம்பிக்கையாளனாக இருந்தவன், மாலையில் இறைமறுப்பாளனாக ஆகி விடுவான். சிலர் தங்களின் மார்க்கத்தை இவ்வுலகப் பொருட்களுக்காக விற்பார்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக் (ரலி) நூல் - திர்மிதீ, அஹ்மத்.

# மாபெரும் பத்து அடையாளங்கள்

மேலே கூறப்பட்ட அடையாளங்களில் சிலவற்றை நாம் இன்றே நாம் கண்டு கொண்டிருக்கிறோம். மற்றவை இனி நடைபெற உள்ளன. ஆனால் கீழே சொல்லப்படுபவை அனைத்தும் இறுதிநாளுக்கு முன் நடைபெற உள்ள பெரிய நிகழ்வுகள் ஆகும். இவற்றை மிக முக்கியமான அடையாளங்களாக நபிகள் நாயகம் (ஸல்) குறிப்பிட்டார்கள்:

1 - புகை மூட்டம் 2 - தஜ்ஜால் 3 - (அதிசயப்) பிராணி 4 - சூரியன் மேற்கிலிருந்து உதிப்பது 5 - ஈஸா (அலை) இறங்கி வருவது 6 - யஃஜூஜ், மஃஜூஜ் 7 - கிழக்கே ஒரு பூகம்பம் 8 - மேற்கே ஒரு பூகம்பம் 9 - அரபு தீபகற்பத்தில் ஒரு பூகம்பம் 10 - இறுதியாக ஏமனிலிருந்து புறப்படும் தீப்பிழம்பு மக்களை விரட்டிச் சென்று ஒன்று சேர்த்தல்

ஆகிய பத்து அடையாளங்களை நீங்கள் காணும் வரை அந்த நாள் வராது என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள். அறிவிப்பவர்: ஹுதைபா (ரலி), நூல்: முஸ்லிம் 5162.

இந்த பத்து அடையாளங்களில் மிகப் பிரதானமான மூன்று அடையாளங்கள் ஏற்படுமாயின் இறைநம்பிக்கை கொள்வது கூட பயனளிக்காது என்றும் நபிகளார் கூறியுள்ளார்கள்.

● “சூரியன் மேற்கிலிருந்து உதிப்பது, தஜ்ஜால், அதிசயப் பிராணி ஆகிய மூன்று அடையாளங்கள் தோன்றி விடுமாயின், அவற்றுக்கும் முன் இறைநம்பிக்கை கொண்டிருந்தால் தவிர, எவருக்கும் அவரது இறை நம்பிக்கை பயனளிக்காது“ என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல்கள் - முஸ்லிம், இப்னுமாஜா.)

● “சூரியன் மேற்கிலிருந்து உதிக்கும் வரை அந்த நாள் வராது. அவ்வாறு உதிப்பதை மக்கள் காணும்போது இறைநம்பிக்கை கொள்வார்கள். ஆனால் அது எவருக்கும் இறைநம்பிக்கை பயனளிக்காத நேரமாகும்“ என்று நபி (ஸல்) கூறினார்கள். நூல்கள் - புகாரீ, முஸ்லிம், இப்னுமாஜா.

**புகை மூட்டம்**

● **வானம் தெளிவான புகைகளை வெளிப்படுத்தக் கூடிய நாளை எதிர்பார்ப்பீராக! அப்புகை மனிதர்களைச் சூழ்ந்து கொள்ளும். இது கடுமையான வேதனையாக அமைந்திருக்கும்.. (அல் குர்ஆன் 44:10-11)**

● ”உங்கள் இறைவன் உங்களுக்கு மூன்று விஷயங்களைப் பற்றி எச்சரிக்கிறான். அவற்றில் ஒன்று புகை மூட்டம், இது ஒரு (இறை விசுவாசியை) ஜலதோஷம் பிடிப்பது போல் பிடிக்கும். (இறை மறுப்பாளரை) பிடிக்கும் போது அவன் ஊதிப்போவான். அவனது செவிப்பறை வழியாக புகை வெளிப்படும். இரண்டாவது (அதிசயப்) பிராணி, மூன்றாவது தஜ்ஜால்” என்று நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பாளர் : அபூ மாலிக் (ரலி) நூல் - தப்ரானி.

**அதிசயப் பிராணி**

● **அவர்களுக்கு எதிரான தீர்ப்பு உறுதியாகும்போது இப்பூமியிலிருந்து ஒரு பிராணியை நாம் அவர்களுக்காக வெளிப்டுத்துவோம். அப்பிராணி அவர்களுடன் பேசும். (இதற்குக் காரணம்) மக்கள் நம் வசனங்களை நம்பாமல் இருந்ததுதான் (அல் குர்ஆன் 527:82).**

● சூரியன் மேற்கிலிருந்து உதிப்பதும், நண்பகல் நேரத்தில் அந்தப்பிராணி மக்களுக்குக் காட்சி தருவதும் ஆரம்ப அடையாளங்களாகும். இவ்விரண்டில் எது முதலில் தோன்றினாலும் அதைக் தொடர்ந்து அடுத்ததும் தோன்றி விடும் என நபி (ஸல்) கூறினார்கள். அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு

அம்ரு (ரலி) நூல் - முஸ்லிம்.

**மேற்கில் சூரியன் உதிப்பது**

● "சூரியன் மேற்கிலிருந்து உதிக்காமல் மறுமை நாள் ஏற்படாது. அதைக் கண்டதும் மக்கள் (இறைவனை) நம்புவார்கள். ஆனால் அதற்கும் முன்பே நம்பிக்கை கொள்ளாமல் இருந்தோருக்கு அப்போது கொள்ளும் நம்பிக்கை பயனளிக்காது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) நூல் - புகாரீ 6506

**கதையல்ல நிஜம்!**

# இப்படி ஒரு ஆட்சியாளர் வருவாரா?

நபித்தோழர் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

"என் தந்தையார் அவர்களின் மீது கடன் இருக்கும் நிலையில் உஹுதுப் போரின் போது வீரமரணம் அடைந்தார்கள். கடன் வழங்கியவர்கள் கடனைத் திருப்பிக் கேட்டு எனக்கு நெருக்கடி தந்தார்கள். உடனே, நான் அண்ணல் நபியவர்களிடம் சென்று விஷயத்தைக் கூறினேன். நபிகளார் (ஸல்) என் தந்தைக்கு கடன் கொடுத்தவர்களை அழைத்துப் பேசினார்கள் என் தோட்டத்தின் கனிகளைப் பெற்றுக் கொண்டு, மீதியுள்ள கடனை தள்ளுபடி செய்யும்படி வேண்டிக் கொண்டார்கள்.

ஆனால், அவர்களோ நபி (ஸல்) அவர்களின் பரிந்துரையை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். ஆகவே, நபி (ஸல்) அவர்கள் அவர்களைச் சென்று வருமாறும், நாம் அழைக்கும் போது வந்து வாங்கிச் செல்லுமாறும் கூறினார்கள்.

கடனுக்குப் பரிகாரமாக என் தோட்டத்தை அவர்களிடம் கொடுக்கவுமில்லை, கனிகளைப் பறித்து தரவுமில்லை. மாறாக, "ஜாபிரே! உம்மிடம் நான் நாளை வருவேன்" என்றார்கள். மறுநாள் கலையில் எங்களின் தோட்டத்திற்கு வந்தார்கள்.

பேரீச்ச மரங்களுக்கிடையில் சுற்றிவந்து, அதன் கனிகளில் பரக்கத் (எனும் அருள்வளத்) திற்காக பிரார்த்தித்தார்கள். பின்பு நபிகளார் சென்று விட்டார்கள். நபிகளாரின் பிரார்த்தனையை இறைவன் ஏற்றுக் கொண்டான் போலும். வெகு விரைவிலேயே கனிகள் நிறைந்தன.

நான் அவற்றைப் பறித்துக் கடன்காரர்களின் கடனை முழுமையாக நிறைவேற்றினேன். கடனை வீட்டிய பிறகும் சிறிதளவு கனிகள் எஞ்சின.

பிறகு நான் இறைத்தூதரிடம் அவர்கள் சபையில் அமர்ந்திருந்த போது சென்று நடந்தவைகளைக் கூறினேன்.

அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அங்கு சபையில் அமர்ந்திருந்த உமர் (ரலி) அவர்களை நோக்கி "உமரே! கேளுங்கள்" என்றார்கள். அதற்கு உமர் (ரலி) அவர்கள் "இறைவன் மீது சத்தியமாக! தாங்கள் இறைவனின் தூதர்தாம் என்பதை நாங்கள் நன்கு அறிந்து வைத்திருக்கின்றோம்." என்றார்கள். (நூல்:புகாரி)

மேற்படி நிகழ்வில் கவனிக்கவேண்டிய விடயங்கள்

அ) உயிர்த்தியாகம் செய்த இராணுவ வீரரின் குடும்ப நலனில் ஆட்சியாளர் காட்டும் அக்கறை. ஆ) கடன் கொடுத்தவருக்கு ஆட்சியாளரின் பரிந்துரையை மறுக்கும் உரிமை. இ)ஆட்சியாளர் குடிமகனின் பிரச்சினையை இறைவனிடம் ஒப்படைத்தல் ஈ)இறையச்சம் கொண்ட ஆட்சியாளரின் பிரார்த்தனை இறைவனால் ஏற்றுக்கொள்ளப் படுதல்.

**உலக அழிவுக்கு முன்...**

# தஜ்ஜாலின் வருகை

தஜ்ஜால் என்ற கொடியவனின் வருகை மக்களின் இறை நம்பிக்கைக்கு மிகப்பெரும் சோதனையாக இருக்கும். கிறிஸ்தவர்களிடையே அந்திக்கிறிஸ்து என்று அறியப்படும் இவனைப் பற்றி நபிகளாருக்கு முன் வந்த எல்லா இறைத்தூதர்களும் தத்தமது மக்களுக்கு எச்சரித்துள்ளனர்.

- "ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்பட்டது முதல், (மறுமை) நாள் வரும் வரை தஜ்ஜால் விஷயத்தைத் தவிர பெரிய விஷயம் ஏதும் ஏற்படுவதில்லை" என்று நபி (ஸல்) கூறினார்கள்.(நூல் முஸ்லிம்).

அவனைப் பற்றிய வருணனைகள் மற்றும் செய்திகள் பல நபிமொழிகளில் காணக் கிடைக்கின்றன. விரிவஞ்சி அவற்றின் சாரத்தை மட்டும் கீழே தருகிறோம்.

- அவன் வந்தால் பூமி முழுதும் பயணம் செய்வான்.. நாற்பது நாட்களில் மக்கா, மதீனா என்ற இரு ஊர்களைத் தவிர எல்லா ஊர்களுக்கும் செல்வான். அந்த இரு ஊர்களுக்குள் அவனை நுழையவிடாமல் வானவர்கள் தடுப்பார்கள்.
- அவன் மக்களிடையே வந்து அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்திவிட்டு தன்னையே கடவுள் என்று கூறுவான்.
- வானத்திற்கு மழைபொழியுமாறும் பூமிக்கு விளைவிக்குமாறும் கட்டளையிடுவான்.அவ்வாறே நிகழும்.
- தஜ்ஜால் பிறவிக் குருடையும், வெண் குஷ்டத்தையும், நீக்குவான் இறந்தவர்களை உயிர்ப்பிப்பான். கட்டுடல் உடைய ஓர் இளைஞனை அழைப்பான், அவனை இரண்டு துண்டுகளாக வாளால் வெட்டுவான். பிறகு அவனைக் கூப்பிடுவான், உடனே அந்த இளைஞன் சிரித்துக் கொண்டே பிரகாசமான முகத்துடன் உயிர் பெறுவான். இவற்றையெல்லாம் செய்து காண்பித்து விட்டு "இதைக் கடவுளைத் தவிர வேறுயாரும் செய்ய முடியுமா?" என்று கேட்பான்.
- அவனைக் கடவுளாக ஏற்றுக் கொண்டவர்களுக்கு வாழ்வில் செல்வ செழிப்பும் ஏற்றுக் கொள்ளாமல் படைத்தவன் மட்டுமே இறைவன் என்ற கொள்கையில் உறுதியாக நிற்பவர்களுக்கு வறுமையும் ஏற்படும். இவ்வாறு உலகம் முழுவதும் தஜ்ஜால் மக்களிடையே பெருங்குழப்பம் விளைவிப்பான்.

வறுமையில் வாடிக்கொண்டிருக்கும் வேளையில் மீண்டும் கொள்கைவாதிகள் இடையே வந்து ஆசைவார்த்தைகள் காட்டி சிலரை வழிதவற வைப்பான். அவனை ஏற்காதோருக்குப் பலவிதமான சோதனைகளை ஏற்படுத்துவான். இதோ நபிகளார் கூறினார்கள் :

- "தஜ்ஜாலிடம் தண்ணீரும், நெருப்பும் இருக்கும். மக்கள் எதைத் தண்ணீர் என்று காண்கிறார்களோ, அது சுட்டெரிக்கும் நெருப்பாகும். மக்கள் எதை நெருப்பு என்று காண்கிறார்களோ, அது சுவை மிகுந்த குளிர்ந்த தண்ணீராகும். உங்களில் ஒருவர் இந்த நிலையை அடைந்தால், நெருப்பு எனக் காண்பதில் விழட்டும்" என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல்கள் - புகாரீ, முஸ்லிம்).

தஜ்ஜாலின் சோதனைகளில் இருந்து தப்பிக்க சில பிரார்த்தனைகளையும் குர்ஆன் வசனங்களையும் நபிகளார் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அவற்றை அறிய விரும்புவோர் நபிமொழி நூல்களை நாடலாம்.

இவ்வாறு மக்களை அவன் வழிகெடுத்து குழப்பம் விளைவித்துக்கொண்டு இருக்கும்போது இறைவன் ஈசா (அலை) அதாவது ஏசு நாதரை அனுப்புவான்.

உலக அழிவுக்கு முன்...

# ஏசுநாதரின் இரண்டாம் வருகை

அதை அறியும் முன் ஏசுநாதரைப் பற்றி திருக்குர்ஆனும் நபிமொழிகளும் கூறுவதைச் சுருக்கமாக இங்கு காண்பது நலம்.

● ஆண்துணை ஏதுமின்றி அன்னை மரியாளுக்கு மகனாக அற்புதமாகப் பிறந்தவர் ஏசுநாதர். எவ்வாறு முதல் மனிதரான ஆதாம் மற்றும் முதல் பெண்மணியான ஏவாள் இவர்களின் பிறப்பு அற்புதமானதோ அதுபோல இறைவனின் கட்டளைப் படி நிகழ்ந்த ஒன்றே ஏசுவின் பிறப்பும் என்று இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

**3:59. அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே. அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப்பின் ''குன்'' (ஆகுக) எனக் கூறினான். அவர் (மனிதர்) ஆகிவிட்டார்.**

● இந்த பூமியின் பல்வேறு இடங்களில் பல்வேறு காலகட்டங்களில் வந்து சென்ற எல்லா இறைத்தூதர்களும் தத்தமது மக்களுக்கு படைத்த இறைவன் ஒருவனையே வணங்க வேண்டும், படைப்பினங்கள் எதனையும் வணங்கக் கூடாது, இறைவனின் எவல்விலக்கல்களைப் பேணி வாழவேண்டும் என்பதனையே போதித்தார்கள். அவ்வாறு இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து வாழ்தலே அரபு மொழியில் இஸ்லாம் என்று அறியப்படுகிறது. அந்த வகையில் அனைத்து இறைத்தூதர்களும் போதித்த அதே கொள்கையைத்தான் ஏசுநாதரும் தம் மக்களுக்கு போதித்தார். அவரைத் தொடர்ந்து வந்த இறுதித்தூதரான முஹம்மது நபி அவர்களும் அதையே - இஸ்லாத்தையே - போதித்தார். (அவர்கள் அனைவர் மீதும் இறைசாந்தி உண்டாவதாக)

**ஏசநாதர் இறைவனால் காப்பாற்றப் படுதல்**

மதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றிப் பிழைத்துக் கொண்டிருந்த யூதர்கள் சத்திய போதனை செய்துகொண்டிருந்த ஏசுவுக்கு எதிராகத் திரண்டார்கள். அவரைக் கொல்ல சதி செய்தார்கள். அவரை சிலுவையில் ஏற்றிக் கொல்ல திட்டம் தீட்டினார்கள். ஆனால் வல்ல இறைவன் அவரைக் காப்பாற்றி தன்னளவில் உயர்த்திக் கொண்டான்.

ஆனால் இயேசுவை சிலுவையில் ஏற்றி நாங்கள் கொன்றுவிட்டோம் என்று யூதர்கள் பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் யூதர்களின் இந்தக் கூற்றை இறைவன் வன்மையாகத் திருக்குர்ஆனில் மறுக்கிறான்.

● **அவர்கள் (ஏக இறைவனை) மறுத்ததாலும், மர்யமின் மீது மிகப் பெரும் அவதூறை அவர்கள் கூறியதாலும், அல்லாஹ்வின் தூதரான மர்யமின் மகன் மஸீஹ் எனும் ஈஸாவை நாங்களே கொன்றோம்'' என்று அவர்கள் கூறியதாலும் (யூதர்கள்) சபிக்கப்பட்டனர். அவரை அவர்கள் கொல்லவில்லை. அவரைச் சிலுவையிலும் அவர்கள் அறையவில்லை. மாறாக அவர்களுக்கு ஆள் மாறாட்டம் செய்யப்பட்டது. இதில் முரண்பட்டோர் சந்தேகத்திலேயே உள்ளனர். ஊகத்தைப் பின்பற்றுவதைத் தவிர அவர்களுக்கு இது குறித்து அறிவு இல்லை. அவர்கள் அவரை உறுதியாகக் கொல்லவே இல்லை. மாறாக அவரை அல்லாஹ் தன்னளவில் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையோனாகவும் இருக்கிறான். (திருக்குர்ஆன் : 4: 156-158)**

அதாவது ஏசு அற்புதமான முறையில் காப்பாற்றப்பட்டு இறைவனால் உயர்த்தப்பட்டார். சிலுவையில் உண்மை ஏசுவை அறையவில்லை ஆனால் ஆள்மாறாட்டம் செய்யப்பட்ட நபர்தான் சிலுவையில் அறையப்பட்டார்

என்பதையே திருக்குர்ஆன் நமக்கு ஐயமற எடுத்துரைக்கிறது.

● (ஈஸாவை நிராகரித்தோர் அவரைக் கொல்லத்) திட்டமிட்டுச் சதி செய்தார்கள். அல்லாஹ்வும் சதி செய்தான். தவிர அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகச் சிறந்தவன் ஆவான். ''ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன். இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன். நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன். மேலும் உம்மைப் பின்பற்றுவோரை இறுதி நாள் வரை நிராகரிப்போருக்கு மேலாகவும் வைப்பேன். பின்னர் உங்களுடைய திரும்புதல் என்னிடமே இருக்கிறது. (அப்போது) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களிடையே தீர்ப்பளிப்பேன்'' என்று அல்லாஹ் கூறியதை (நபியே! நினைவு கூர்வீராக)! (திருக்குர்ஆன் 3:54,55)

## இணைய இருக்கும் இரு சமூகங்கள்

அவ்வாறு இறைவனால் காப்பாற்றப்பட்ட ஏசுநாதர் மீண்டும் பூமிக்கு வருவார். மீண்டும் மக்களை சத்தியத்துக்கு (அதாவது இஸ்லாத்துக்கு) அழைப்பார். கிருஸ்துவ சகோதரர்கள் கொண்டிருக்கும் தவறான நம்பிக்கைகளைத் தெளிவு படுத்துவார். உலக முஸ்லிம்களையும் கிருஸ்துவர்களையும் ஒன்றிணைப்பார்.

இவ்வாறு இறைவனால் தன்னளவில் உயர்த்தப்பட்ட ஏசுநாதர் மீண்டும் பூமிக்கு வருதலையே இரண்டாம் வருகை என அறியப்படுகிறது.

அவர் எவ்வாறு, எங்கு வருவார்கள் என்பதைப் பின்வரும் நபிமொழிகள் எடுத்துரைக்கின்றன.

● டமாஸ்கஸ் நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள வெள்ளை மினாராவு(கோபுரத்து)க்கு அருகில் அவர் இறங்குவார். இரண்டு வானவர்களின் சிறகுகள் மீது தன் கைகளை வைத்தவராக இறங்குவார். அவர் தலை குனிந்தால் தலையில் நீர் கொட்டும், தலையை உயர்த்தினால் முத்துப்போல் தண்ணீர் சிதறும். அவரது மூச்சுக்காற்று படும் எந்த இறை மறுப்பாளரும் இறந்தே போவார். பின்னர் தஜ்ஜாலைத் தேடுவார்கள். "லுத்" எனும் ஊர்வாசலில் அவனைப் பிடித்துக் கொல்வார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்-திர்மிதீ).

● "எனது உயிரை தன் கையில் வைத்திருப்பவன் மீத சத்தியமாக, மர்யமின் மகன் (ஈஸா), உங்களிடம் நீதி செலுத்துபவராக, தீர்ப்பு வழங்குபவராக இறங்குவார், சிலுவையை முறிப்பார், பன்றியைக் கொல்வார், ஜிஸ்யா வரியை நீக்குவார், (தர்மம்) வாங்குவதற்கு எவருமே இல்லாத அளவுக்கு செல்வம் கொழிக்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) நூல்கள் - புகாரீ, முஸ்லிம்.

தஜ்ஜால் வந்து, பூமியில் பெரும் குழப்பம் விளைவிக்கும் காலகட்டத்தில் ஈஸா நபி (அலை) இறங்கி வந்து, அவனைத் தேடிக் கொல்வார்கள். தஜ்ஜாலின் வருகையைத் தொடர்ந்தே ஏசுநாதரின் அவர்களின் வருகையும் இருக்கும் என்பது தெளிவு.

● வட்டியை உண்போர் (மறுமை நாளில்) ஷைத்தான் தீண்டியவனைப் போல் பைத்தியமாகவே எழுவார்கள். 'வியாபாரம் வட்டியைப் போன்றதே' என்று அவர்கள் கூறியதே இதற்குக் காரணம். அல்லாஹ் வியாபாரத்தை அனுமதித்து வட்டியைத் தடை செய்து விட்டான். தமது இறைவனிடமிருந்து அறிவுரை தமக்கு வந்த பின் விலகிக் கொள்பவருக்கு முன் சென்றது உரியது. அவரைப் பற்றிய முடிவு அல்லாஹ்விடம் உள்ளது. மீண்டும் செய்வோர் நரகவாசிகள். அதில் நிரந்தரமாக இருப்பார்கள். (அல்குர்ஆன் 2:275)

உலக அழிவுக்கு முன்...

# யஃஜூஜ், மஃஜூஜ் வருகை

ஏசு பூமியில் மீண்டும் வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில்தான் யஹ்ஜூஜ், மஹ்ஜூஜ் என்ற கொடியவர்கள் வருவார்கள்.

● **'இறுதியில் யஹ்ஜூஜ், மஹ்ஜூஜ் கூட்டத்தினர் திறந்து விடப்படுவார்கள், உடனே அவர்கள் (வெள்ளம் போல்) ஒவ்வொரு மேட்டிலிருந்தும் விரைந்து வருவார்கள்'... (அல் குர்ஆன் 21:96)**

அவர்களைப் பற்றி நபிமொழிகளில் காணக் கிடைக்கும் குறிப்புகள் சுருக்கமாக இவையே:

● உருவத்தில் சிறிய அவர்கள் அதிகமாக இனப்பெருக்கம் செய்பவர்களாக இருப்பார்கள். மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அவர்கள் பெருங்குழப்பங்களை விளைவிப்பார்கள்.

● யஹ்ஜூஜ் மஹ்ஜூஜ் கூட்டத்தினர் ஆதம் (அலை) அவர்களின் சந்ததிகளாவர். அவர்கள் விடுவிக்கப்பட்டால் மக்களின் வாழ்க்கையைப் பாழாக்குவார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஆயிரம் அல்லது அதற்கும் மேலான வாரிசுகளை உருவாக்காமல் மரணிப்பதில்லை என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் - அஹ்மத், தப்ரானி.)

## ஏசுவின் பிரார்த்தனையால் அழிவர்!

● “யஹ்ஜூஜ் - மஹ்ஜூஜ் கூட்டத்தினரை அல்லாஹ் வெளிப்படுத்துவான். அவர்கள் முதல் கூட்டத்தினர் ஒரு நீரோடையைக்கண்டு அதன் நீரைப்பருகுவார்கள். அடுத்த கூட்டத்தினர் வரும் போது (தண்ணீர் இல்லாமல் இருப்பதைக் கண்டு) “அந்த இடத்தில் ஒரு காலத்தில் தண்ணீர் இருந்தது“ என்று கூறுவார்கள். பின்னர் பைத்துல் முகத்தஸ் பகுதியில் உள்ள ஒரு மலையை அடைவார்கள்.

“பூமியில் உள்ளவர்களைக் கொன்று விட்டோம். வாருங்கள்! வானில் உள்ளவர்களைக் கொல்வோம்“ என்று கூறுவார்கள், தங்கள் அம்புகளை வானை நோக்கி எய்வார்கள். அவர்களின் அம்புகளில் இரத்தம் பூசி அல்லாஹ் திருப்பி அனுப்புவான். பிறகு அவர்கள் ஈஸா நபியையும், அவரின் தோழர்களையும் முற்றுகையிடுவார்கள்.

பின்னர், ஈஸா நபியும், அவர்களின் தோழர்களும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார்கள். அல்லாஹ் புழுக்களை அவர்களிடம் அனுப்புவான். அந்தப் புழுக்களின் தாக்குதல் காரணமாக அனைவரும் ஒரேடியாக செத்து விடுவார்கள். பின்னர். ஈஸா நபி அவர்களும் அவர்களின் தோழர்களும் (மலையிலிருந்து) தரைக்கு வருவார்கள். யஹ்ஜூஜ் மஹ்ஜூஜ் கூட்டத்தரின் (பிணங்களின்) நாற்றமும், நெருக்கடியும் ஒரு சாண் அளவு இடத்தைக் கூட விடாது பரவி நிற்கும். பின்னர் ஈஸா நபி அவர்களும், அவர்களின் தோழர்களும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார்கள். உடனே அல்லாஹ் ஒட்டகங்களின் கழுத்துக்கள் போன்ற வடிவில் சில பறவைகளை அனுப்புவான். அப்பறவைகள் பிணங்களை சுமந்து சென்று அல்லாஹ் நாடிய இடங்களில் போட்டுவிடும்“ என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல் - முஸ்லிம்).

## ஏசுவின் நல்லாட்சி

● (யஹ்ஜூஜ் - மஹ்ஜூஜ் கூட்டத்தினர் அழிவுக்குப் பின்) அவர்கள் (பயன்படுத்திய) அம்புகள், வில், அம்பாரத் தூளிகள் போன்றவற்றை முஸ்லிம்கள் ஏழு ஆண்டுகளுக்கு விறகாகப் பயன்படுத்துவார்கள். பின்னர் அல்லாஹ் மழையை அனுப்புவான், அனைத்து வீடுகளையும் பூமியையும் அந்த மழை கண்ணாடி போல் கழுவி விடும். பின்னர் பூமியை நோக்கி, ‘உன்

கனிகளை முளைக்கச் செய்! உன்னிடமிருந்த அருள்வளத்தையும் திரும்பக்கொடு“ என்று கூறப்படும். (நல்ல விளைச்சல் ஏற்படும்) அந்நாளில் ஒரு மாதுளம் பழத்தை ஒரு கூட்டமே உண்பார்கள். அதன் தொலி மூலம் (குடை போல் அமைத்து) நிழல் பெறுவார்கள். அந்த அளவுக்கு அது பெரிதாக இருக்கும். பாலிலும் பரக்கத் செய்யப்டும். ஒரு ஒட்டகத்தில் கறக்கப்படும் பால், ஒரு பெரிய கூட்டத்தாருக்குப் போதுமானதாக இருக்கும். ஒரு மாட்டில் ஒரு முறை கறக்கப்டும் பால் ஒரு சமூக மக்களுக்குப் போதுமானதாக இருக்கும். மக்களின் இந்த வளமான வாழ்க்கையின் போது, அல்லாஹ் ஒரு சுகமானக் காற்றை அனுப்புவான். அக்காற்று அக்குள்வரை செல்லும். மூ.்.மின்கள், முஸ்லிம்கள் அனைவரின் உயிர்களும் கைப்பற்றப்படும். மக்கள் கழுதைகள் வெருண்டோடுவது போல் வெருண்டோடுவர். கெட்டமக்கள் மட்டுமே எஞ்சி நிற்பர். அவர்கள் இருக்கும் போதுதான் மறுமைநாள் நிகழும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் (ரலி) நூல் - திர்மிதீ.

● (தஜ்ஜாலைக் கொன்றபின்) நாற்பது ஆண்டுகள் ஈஸா நபி (அலை) அவர்கள் இந்த பூமியில் நேர்மையான தலைவராக, சிறந்த நீதிவானாகத் திகழ்வார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) நூல்- அஹ்மத்.

மேற்படி தகவல்களில் இருந்து தஜ்ஜால் வருகை, ஏசுவின் வருகை, யஹ்ஜூஜ்-மஹ்ஜூஜ் கூட்டம் வருகை என இம்மூன்றும் அடுத்தடுத்து நடைபெறும் என்பதும் முழுக்க முழுக்க இறைமறுப்பாளர்களும் தீய நடத்தை உள்ளவர்களும் வாழும் போதே உலகம் அழியும் என்பதும் நமக்குத் தெரிகிறது.

**மூன்று பூகம்பங்கள்**

● “(மதீனாவின்) கிழக்கே ஒரு பூகம்பம், மேற்கே ஒரு பூகம்பம், அரபு தீபகற்பத்தில் ஒரு பூகம்பம் என மூன்று பூகம்பங்கள் - நில நடுக்கம் ஏற்படும் அதை நீங்கள் காணும் வரை மறுமை நாள் நிகழாது“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் - முஸ்லிம்).

இங்கே குறிப்பிடப்படும் பூகம்பங்கள் மூன்றும் பெரிய அளவில் இருக்கும் என்பதையே நமக்கு விளக்குகிறது.

**பெரும் நெருப்பு**

● “யமனிலிருந்து நெருப்புத் தோன்றி மக்களை அவர்களின் மஹ்‘ரின் பால் விரட்டிச்செல்லும். அது நிகழும் வரை மறுமை நாள் நிகழாது“ என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல் - முஸ்லிம்)

யமனில் தோன்றும் இந்த நெருப்பு மக்களை நாலா திசைகளிலும் சூழ்ந்து கொள்ளும். இந்த நெருப்பின் வளையத்திற்குள் மக்கள் சிக்கிக்கொள்வர்.

# நன்மை உங்களுக்கே!

**● மனிதர்களே! இந்தத் தூதர் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்குச் சத்தியத்தைக் கொண்டு வந்திருக்கின்றார். எனவே, நம்பிக்கை கொள்ளுங்கள். அது உங்களுக்கே நன்மை பயக்கும். ஆனால் நீங்கள் நிராகரித்தால் வானங்கள், பூமியிலுள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்! மேலும் அல்லாஹ் நன்கறிந்தவனாகவும், நுண்ணறிவாளனாகவும் இருக்கின்றான். (திருக்குர்ஆன் 4:170)**

## அந்த நாள் நிகழ்வுகள் - திருக்குர்ஆனில்...

திருக்குர்ஆனில் இறைவன் பல்வேறு விதமாக பல்வேறு இடங்களில் அந்நாளின் நிகழ்வுகளை எடுத்துரைக்கிறான் விரிவஞ்சி அவற்றில் இருந்து ஒரு சிலதை மட்டுமே மாதிரிக்காகத் தருகிறோம். மேலும் அறியத் துடிப்பவர்கள் திருக்குர்ஆன் தமிழாக்கத்தை வாங்கிப் படிக்கலாம்.

. இவ்வசனங்கள் அன்றைய பாலைவனத்துப் பாமர மக்களை நோக்கியும், அறிவியல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு முன்னேறியுள்ள இன்றைய கால மக்களை நோக்கியும், அறிவியலின் உச்சக்கட்டத்தை எட்டி நிற்கப் போகும் நாளைய கால மக்களை நோக்கியும் ஒரே நேரத்தில் பேசுகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

### திருக்குர்ஆனின் 81 ஆம் அத்தியாயத்தில்.......

81:1. சூரியன் சுருட்டப்படும் போது
81:2. நட்சத்திரங்கள் உதிர்ந்து விழும்போது-
81:3. மலைகள் பெயர்க்கப்படும் போது-
81:4. சூல் நிறைந்த ஒட்டகைகள் (கவனிப்பாரற்று) விடப்படும் போது-
81:5. காட்டு மிருகங்கள் (மனிதர்களுடனும், இதர பிராணிகளுடனும்) ஒன்று சேர்க்கப்படும்போது-
81:6. கடல்கள் தீ மூட்டப்படும்போது-
81:7. உயிர்கள் ஒன்றிணைக்கப்படும் போது-
81:8. உயிருடன் புதைக்கப்பட்ட பெண் (குழந்தை) வினவப்படும் போது-
81:9. ''எந்தக் குற்றத்திற்காக அது கொல்லப்பட்டது?'' என்று-
81:10. பட்டோலைகள் விரிக்கப்படும் போது-
81:11. வானம் அகற்றப்படும் போது-
81:12. நரகம் கொழுந்துவிட்டு எரியுமாறு செய்யப்படும் போது-
81:13. சுவர்க்கம் சமீபமாக கொண்டு வரப்படும்போது-
81:14. ஒவ்வோர் ஆத்மாவும், தான் கொண்டு வந்ததை அறிந்து கொள்ளும்.

### திருக்குர்ஆனின் 80 ஆம் அத்தியாயத்தில்.......

80:33.ஆகவே, (யுக முடிவின் போது காதைச் செவிடாக்கும் பெருஞ் சப்தம் வரும் போது -
80:34.அந்த நாளில் மனிதன் விரண்டு ஓடுவான் - தன் சகோதரனை விட்டும் 80:35.தன் தாயை விட்டும், தன் தந்தையை விட்டும்
80:36.தன் மனைவியை விட்டும், தன் மக்களை விட்டும்-
80:37.அன்று ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் (அவல) நிலையே போதுமானதாயிருக்கும்.

### திருக்குர்ஆனின் 82 ஆம் அத்தியாயத்தில்.......

82:1. வானம் பிளந்து விடும்போது
82:2. நட்சத்திரங்கள் உதிர்ந்து விழும்போது-
82:3. கடல்கள் (பொங்கி ஒன்றால் ஒன்று) அகற்றப்படும் போது,
82:4. கபருகள் (புதைகுழிகள்) திறக்கப்படும் போது,
82:5. ஒவ்வோர் ஆத்மாவும், அது எதை முற்படுத்தி (அனுப்பி) வைத்தது, எதைப் பின்னே விட்டுச் சென்றது என்பதை அறிந்து கொள்ளும்.

# இறுதித் தீர்ப்பு நாளில் விசாரணை

உலக அழிவுக்குப் பின் இறைவனின் கட்டளை வரும்போது . முதல் மனிதர் முதல் கடைசி மனிதர் வரை அனைத்து மனிதர்களும் உயிர்கொடுத்து எழுப்பபடுவார்கள் தொடர்ந்து எழக்கூடிய பெரும் சப்தத்தைத் தொடர்ந்து அனைவரும் இறைவன் முன்னால் விசாரணைக்காக ஆஜராக்கப் படுவார்கள்.

● **78:17,18.** நிச்சயமாகத் தீர்ப்புக்குரிய நாள், நேரங்குறிக்கப் பட்டதாகவே இருக்கிறது. ஸூர் (எக்காளம்) ஊதப்படும் அந்நாளில் நீங்கள் அணிஅணியாக வருவீர்கள்.



அன்றைய நாள் விசாரணையில் முழுமையாக நியாயம் தீர்க்கப் படும். அந்த நாளில் விசாரணை குறித்த குர்ஆன் வசனங்களும் நபிமொழிகளும் ஏராளமாக வந்துள்ளன. விரிவஞ்சி சிலவற்றை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறோம்.

### அனைத்தும் வெட்டவெளிச்சமாகும் நாள்

● **36:65.** அந்த நாளில் நாம் அவர்களின் வாய்களின் மீது முத்திரையிட்டு விடுவோம் அன்றியும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தது பற்றி அவர்களுடைய கைகள் நம்மிடம் பேசும் அவர்களுடைய கால்களும் சாட்சி சொல்லும்.

● **99:6-8** அந்நாளில், மக்கள் தங்கள் வினைகள் காண்பிக்கப்படும் பொருட்டு, பல பிரிவினர்களாகப் பிரிந்து வருவார்கள். எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்.

● **18:48** அவர்கள் யாவரும் உம்முடைய இறைவனின் சமூகத்தில் வரிசையாகக் கொண்டு வரப்படுவார்கள் ''நாம் உங்களை முதல் தடவை படைத்தவாறே திட்டமாக இப்பொழுதும் நீங்கள் நம்மிடம் வந்து விட்டீர்கள், ஆனால் நாம் உங்களுக்காக வாக்களிக்கப்பட்ட இத்தகைய நாளை ஏற்படுத்த மாட்டோம் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்'' (என்று சொல்லப்படும்).

● **18:49** இன்னும் பதிவேடு (அவர்கள் முன்) வைக்கப்படும் அதிலுள்ளதைக் கண்டு குற்றவாளிகள் மிக்க அச்சத்துடன் இருப்பதைக் காண்பீர் மேலும் அவர்கள், ''எங்கள் கேடே! இந்த ஏட்டிற்கு என்ன (நேர்ந்தது)? சிறியவையோ பெரியவையோ எதையும் வரையறுக்காது இது விட்டுவைக்கவில்லையே!'' என்று கூறுவார்கள் இன்னும், அவர்கள்செய்த யாவும் அவர்கள் முன் வைக்கப்படுவதைக் காண்பார்கள் ஆனால் உம்முடைய இறைவன் ஒருவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்.

● நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மோசடி செய்பவனுக்கு மறுமை நாளில் (அவனுடைய மோசடியை வெளிச்சமிட்டுக் காட்டும் முகமாக அடையாளக்) கொடி ஒன்று நட்டப்படும். அப்போது "இது இன்னார் மகன் இன்னாரின் மோசடி(யைக் குறிக்கும் கொடி)"" என்று கூறப்படும்.

அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) நூல்: புகாரி

● இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் பிறரது நிலத்தில் ஒரு பகுதியை அபகரித்துக் கொண்டாரோ அவர் ஏழு நிலங்களை (மறுமையில்) கழுத்தில் மாலையாகக் கட்டித் தொங்க விடப்படுவார்.

அறிவிப்பவர்: சயீத் பின் ஸைத் (ரலி) நூல்: புகாரி

# அநியாயங்கள் பழி தீர்க்கப்படும் நாள்

யார் யாருக்கு எந்த அநியாயம் செய்திருந்தாலும், மோசடி செய்திருந்தாலும் யாரைப்பற்றி புறம், அவதூறு, பொய் போன்றவை பேசியிருந்தாலும் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ மறைமுகமாகவோ பகிரங்கமாகவோ அவமானப் படுத்தியிருந்தாலும் ஏளனப் படுத்தியிருந்தாலும் அனைத்துமே வெளிவந்து விடும் நாள் அது.

**நல்லறங்கள் கைமாறப்படும்**

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

யாரேனும் தம் சகோதரர்களுக்கு மானம் அல்லது பொருட்கள் சம்பந்தமாக அநீதி இழைத்திருந்தால் தங்கக்காசுகளோ, வெள்ளிக் காசுகளோ பயனளிக்காத நாள் வரும் முன் இன்றே பாதிக்கப்பட்டவரிடம் பரிகாரம் தேடிக் கொள்ளட்டும். இவரிடம் ஏதேனும் நல்லறம் இருந்தால் இவர் செய்த அநீதியின் அளவுக்கு அந்த நல்லறம் எடுக்கப்படும். பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படும். இவரிடம் நன்மைகள் ஏதுமில்லாவிட்டால் இவரால் பாதிக்கப்பட்டவரின் தீமைகள் எடுக்கப்பட்டு இவர்மேல் வைக்கப்படும் (நூல்: புகாரி)

**வணக்கசாலி திவாலாகும் நாள்!**

● "(அனைத்தையும்) இழந்தவன் யார் என்பது உங்களுக்கு தெரியுமா?" என்று நபி (ஸல்) கேட்டனர். "யாரிடம் காசோ ஏனைய சொத்துக்களோ இல்லையோ அவர்தான்" என்று நபித்தோழர்கள் கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் "இழந்தவன் யாரெனில்" தொழுகை, நோன்பு, ஜகாத் ஆகிய கடமைகளை நிறைவேற்றிவிட்டு ஒருவனைத் திட்டியவனாக இன்னொருவன் மேல் அவதூறு கூறியவனாக மற்றொருவனின் பொருளைச் சாப்பிட்டவனாக வேறொருவனின் இரத்தத்தை ஓட்டியவனாக, இன்னொருவனை அடித்தவனாக மறுமைநாளில் வருவான். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவனுக்கும் இவனது நன்மைகள் வழங்கப்படும். கணக்குத் தீர்வதற்கு முன்னால் இவனது நன்மைகள் முடிந்து விட்டால் பாதிக்கப்பட்டவர்களின் பாவங்கள் எடுக்கப்பட்டு இவன் மேல் வீசப்படும். பின்னர் நரகத்தில் இவன் வீசப்படுவான்" என்று விளக்கினார்கள். (நூல்கள்: முஸ்லிம், திர்மிதி)

**மிருகங்களுக்கு இடையிலும் நீதி!**

● (உங்களால் அநீதி இழைக்கப் பட்டவர்களுக்கு) உரிய கடமைகள் மறுமை நாளில் நீங்கள் நிறைவேற்றுவீர்கள். கொம்பு இல்லாத ஆட்டுக்காக கொம்புள்ள ஆடு (முட்டியதற்காக) கணக்குத் தீர்க்கப்டும் என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல்கள்: முஸ்லிம், திர்மிதி)



**முதலாளி - தொழிலாளி உரிமை மீறல்கள்**

● ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களின் முன்னால் வந்து அமர்ந்தார். "அல்லாஹ்வின் தூதரே! எனக்குச் சில அடிமைகள் உள்ளனர். அவர்கள் என்னை நம்புவதில்லை. எனக்கு மாறுசெய்கின்றனர். துரோகம் செய்கின்றனர். எனவே அவர்களை நான் அடிக்கிறேன் திட்டுகிறேன். (மறுமையில்) அவர்களுடன் எனது நிலை எவ்வாறு இருக்கும்?" என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் "கியாமத் நாளில் அவர்கள் உனக்குச் செய்த மாறுபாடு, துரோகம் ஆகியவையும் அவர்களைத் தண்டித்ததும் கணக்கிடப்படும். அவர்களின் குற்றங்களின் அளவுக்கு உன் தண்டனை இருந்தால் இரண்டும் சரிக்குச் சரியாகி விடும். உனக்கு லாபமோ நட்டமோ இராது. அவர்கள் செய்த

குற்றங்களை விட நீ வழங்கிய தண்டனை குறைவாக இருந்தால் அது உனக்கு உபரியாக (லாபமாக) அமையும். அவர்களின் குற்றங்களை விட உன் தண்டனை அதிகமானதாக இருந்தால் அவர்களுக்காக உனது நல்லறங்கள் எடுக்கப்படும்“ என்று விடையளித்தார்கள். அப்போது அந்த மனிதர் அழுது புலம்பியவராக நகரலானார். அவரிடம் நபி (ஸல்) அவர்கள் “கியாமத் நாளில் நீதமான தராசுகளை நாம நிறுவுவோம். எந்த ஆத்மாவுக்கும் எந்த அநீதியும் இழைக்கப்படாது. கடுகளவாக இருந்தாலும் அதையும் நாம் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும்“ என்ற இறைவசனத்தை நீர் ஓதவில்லையா? என்று கேட்டார்கள். அப்போது அந்த மனிதர் “அல்லாஹ்வின் தூதரே! எனது அடிமைகளைப் பிரித்து விடுவது தான் எனக்கும் அவர்களுக்கும் நல்லதாக தெரிகின்றது. அவர்கள் அனைவரும் விடுதலை பெற்றார்கள் என்பதற்கு உங்களையே சாட்சியாக்குகிறேன் என்று அவர் கூறினார். (நூல்: திர்மிதி)

மனிதனுக்கு மனிதன் செய்த கொடுமைகள், தீங்குகள் பற்றி இவ்வளவு கடுமையாக நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளனர். எந்த மனிதனுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அதை இறைவன் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். அநீதி இழைக்கப்பட்டவரிடம் இவ்வுலகிலேயே பரிகாரம் செய்ய வேண்டும். அல்லது மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையெனில் செய்த நல்லறங்கள் யாவும் பயனற்றுப் போவதுடன் பிறரது தீமைகளையும் சுமக்கும் நிலை ஏற்படும்.

● **'அன்றைய தினம் எடை போடுதல் உறுதியான ஒன்று. அந்நாளில் எவர்களுடைய எடை கனத்ததோ அவர்கள் தாம் வெற்றியாளர்கள்' (அல்குர்ஆன் 7:8)**

## வாசகர் எண்ணம்

● கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்பர். தங்களது மலர் பக்கங்கள் குறைவாக இருப்பினும் குரான் , ஹதீஸ் , மார்க்கம் , பொது அறிவு போன்ற பல செய்திகள் அடங்கிய மலராகவும் , பலரும் படித்து தெரிந்து அதன்படி நடக்க, இது போன்ற மலர் மக்களுக்கு தேவைதான். பாராட்டுக்கள், மலர் தொடர்ந்து வெளிவர “ துஆ“ செய்கிறேன்.

**- நாகை. ஜி. அஹ்மது, நாகூர்**

● உங்கள் நற்செய்தி மலரைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். மலர் கைக்குக் கிடைத்ததும் ஒரே மூச்சில் முழவதும் படித்து விடுவேன். அதில் கூறப்படும் இறைவனின் அறிவுரைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்தி வருகிறேன். எல்லாப்புகழும் இறைவனுக்கே.

**- ஜமுனாராணி, திருச்செங்கோடு**

● புத்தூரைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவரின் டீக்கடையில் உங்கள் மலரைப் படிக்க நேரிட்டது. அருமையாக சுவராசியமாக இருந்தது. இதைத் தொடர்ந்து படிக்க விரும்புக்கிறேன்.

**- பி சரவணன், சோமரசம்பேட்டை, திருச்சி**

# திருடிய பொருளே மாலையானால்?

சாதாரணப் சில்லரைப் பொருட்களில் இருந்து பெரும்பெரும் நாட்டு வளங்கள் வரை சிறிய அளவிலிருந்து பெரிய அளவிலான திருட்டும் மோசடியும் கொள்ளையும் அன்றாடம் சகஜமாக நடைபெறுவதை நாம் அனைவரும் அறிவோம். இவற்றைச் செய்பவர்கள் பெரும்பாலும் அதை மற்றவர்களின் கண்களுக்கு தென்படாமல் செய்கிறார்கள். ஒருவேளை பிடிபட்டாலும் காவல்துறையினரை சரிக்கட்டி தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். அதையும் மீறி நீதிமன்றத்திற்கு வழக்கு சென்றால் வலுவான வக்கீல்களை வைத்து வாதாடி ஜெயிக்கிறார்கள். அதையும் மீறினால் நீதிபதியையே சரிக்கட்டவும் ஆட்சியாளர்களை வளைத்துப் போடவும் வழிகள் உள்ளன என்பதை நாம் அறிவோம்.

ஆனால் இவ்வுலகில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படும் அல்லது இன்னும் செய்யப்பட இருக்கின்ற அனைத்து மோசடிகளும் இறைவனின் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வர இருக்கின்றன. அன்று விசாரணையின்போது மேற்கூறப்பட்ட எந்த குறுக்கு வழிகளும் வேலை செய்யாது. மோசடிப்பொருட்களே காட்டிக் கொடுக்கக்கூடிய வகையில் மோசடிக்காரன் கழுத்தில் மாலையாக போடப்படும்.

● நபி (ஸல்) அவர்கள் எங்களிடையே எழுந்து நின்று போர்ச் செல்வங்களை மோசடி செய்வது குறித்துக் கூறினார்கள். அது கடுங்குற்றம் என்பதையும் அதன் பாவம் பெரியது என்பதையும் எடுத்துரைத்தார்கள். அப்போது, 'மறுமை நாளில் தன் கழுத்தில், கத்திக் கொண்டிருக்கும் ஆட்டையும், கனைத்துக் கொண்டிருக்கும் குதிரையையும் சுமந்து கொண்டு வந்து, 'இறைத்தூதரே! என்னைக் காப்பாற்றுங்கள்' என்று (அபயம் தேடி) அலறும் நிலையில் உங்களில் எவரையும் நான் காண வேண்டாம். (ஏனெனில்) அப்போது நான், 'உனக்கு எந்த உதவியும் என்னால் செய்ய முடியாது. உனக்கு நான் (இறைச் சட்டத்தை) எடுத்துரைத்து விட்டேன்' என்று கூறி விடுவேன்.

இவ்வாறே, (மறுமை நாளில்) தன் கழுத்தில் கத்திக் கொண்டிருக்கும் ஒட்டகத்தைச் சுமந்து வந்து, 'இறைத்தூதரே! என்னைக் காப்பாற்றுங்கள்' என்று (அபயம் தேடி) அலறும் நிலையில் உங்களில் எவரையும் நான் காண வேண்டாம். (ஏனெனில்,) அப்போது நான், 'என்னால் உனக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. உனக்கு (இறைச் சட்டத்தை) நான் எடுத்துரைத்து விட்டேன்' என்று கூறி விடுவேன்.

இவ்வாறே (அந்நாளில்) தன் கழுத்தில் வெள்ளியும் தங்கமும் சுமந்து கொண்டு வந்து, 'இறைத்தூதரே! என்னைக் காப்பாற்றுங்கள்' என்று (அபயம் தேடி) அலறும் நிலையில் உங்களில் எவரையும் நான் காண வேண்டாம். (ஏனெனில்,) அப்போது நான், 'என்னால் உனக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. உனக்கு (இறைச் சட்டத்தை) நான் எடுத்துரைத்து விட்டேன்' என்று கூறி விடுவேன்.

அல்லது அசைகின்ற எந்தப் பொருளையாவது தன் கழுத்தில் சுமந்து கொண்டு வந்து 'இறைத்தூதரே! என்னைக் காப்பாற்றுங்கள்' என்று (அபயம் தேடி) அலறிய நிலையில் உங்களில் எவரையும் நான் காண வேண்டாம். (ஏனெனில்,) அப்போது நான், 'என்னால் உனக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. (இறைச் சட்டத்தை) உனக்கு நான் எடுத்துரைத்து விட்டேன்' என்று கூறி விடுவேன்'' என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) நூல்: புகாரி (3073)

# மதீனாவின் வீதிகளில் மது ஆறு

இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன் உள்ள காலகட்டம் அரேபியர்களிடையே ஜாஹிலிய்யா (அறியாமை)க் காலம் என்று அறியப்படுகிறது. அக்காலத்தில் மக்கள் மதுபானப் பிரியர்களாக இருந்தனர். இஸ்லாம் மதுபானத்தை கட்டம் கட்டமாக, படிப்படியாக தடைசெய்து, இறுதியில் மதுப் பழக்கத்தை முற்றாக ஒழித்தது.

ஆரம்பத்தில் மதுபானத்தில் உள்ள நன்மைகளை விட தீமைகள் அதிகம் என்று அல்குர்ஆன் கூறியது. அடுத்த கட்டமாக போதையுள்ள நிலையில் தொழுகைக்குச் செல்ல வேண்டாம் என்று தடுத்தது. மூன்றாம் கட்டமாக மதுவை முற்றிலும் தடைசெய்யும் கட்டளையைத் தாங்கிய திருக்குர்ஆன் வசனங்கள் வந்தன:

**5:90. ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களிலுள்ளவையாகும் ஆகவே நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் - அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.**

**5:91. நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம், மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும், வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடத்தான் எனவே, அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ள மாட்டீர்களா?**

இந்த குர்ஆன் வசனங்களை நபித்தோழர்கள், இறைவிசுவாசிகள் எதிர்கொண்ட விதம் அற்புதமானது. இந்த இறைக் கட்டளையை செவிமடுத்தவுடன் மதுக் கிண்ணங்களை கையில் வைத்துக் கொண்டிருந்தோர் அப்படியே அவைகளை தரையில் தூக்கி எறிந்தார்கள். வீதிகளில் இருந்த மதுபானப் பீப்பாக்களை உடன் கொட்டி வீதிகளில் ஓடவிட்டார்கள்.

● அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறியதாவது:

மது தடைசெய்யப்பட்ட நாளன்று நான் அபூதல்ஹா (ரலி) அவர்களது இல்லத்தில் மக்களுக்கு மது பரிமாறிக்கொண்டிருந்தேன். அந்நாட்களில் நன்கு கனியாத நிறம் மாறிய பேரீச்சங்காய்கள், கனிந்த பேரீச்சம் பழங்கள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பேரீச்ச மதுவையே (ஃபளீக்) அவர்கள் அருந்தினர்.

(மதுவைத் தடைசெய்யும் இறைவசனம் அருளப்பெற்றதும்) ஒரு பொது அறிவிப்பாளர் "(மக்களே!) மது தடைசெய்யப்பட்டுவிட்டது" என்று அறிவிப்புச் செய்தார். அபூதல்ஹா (ரலி) அவர்கள் (என்னிடம்), "வெளியே போய் பார்(த்து வா)" என்று கூறினார்கள். அவ்வாறே நான் வெளியில் சென்றேன். அங்கு பொது அறிவிப்பாளர் ஒருவர் "அறிந்துகொள்ளுங்கள். மது தடைசெய்யப் பட்டுவிட்டது" என்று அறிவிப்புச் செய்து கொண்டிருந்தார்.

இந்த அறிவிப்பைக் கேட்ட அனைவரும் மதுவை வீட்டுக்கு வெளியே ஊற்றினர். மதீனாவின் தெருக்களில் மது ஓடியது. அப்போது அபூதல்ஹா (ரலி) அவர்கள் என்னிடம், "வெளியே சென்று இதையும் ஊற்றிவிடு" என்று (தம்மிடமிருந்த மதுவைக் கொடுத்து) கூறினார். அவ்வாறே நான்

அதை ஊற்றிவிட்டேன்.

அப்போது மக்கள் (அல்லது மக்களில் சிலர்) "மது, தம் வயிறுகளில் இருக்கும் நிலையில் இன்ன மனிதர் கொல்லப்பட்டார். இன்ன மனிதர் கொல்லப்பட்டார் (அவர்களின் நிலை என்னவாகுமோ!)" என்று கூறினர். அப்போதுதான் வல்லமையும் மாண்பும் மிக்க அல்லாஹ், **"(இறைவனை) அஞ்சி, இறைநம்பிக்கை கொண்டு, நல்லறங்கள் செய்து, பிறகு அஞ்சி, இறைநம்பிக்கை கொண்டு, பின்னரும் அஞ்சி, நன்மைகளைச் செய்வார்களானால் (தடுக்கப்பட்டவற்றை முன்னர்) உட்கொண்டதற்காக இறைநம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தோர்மீது எந்தக் குற்றமுமில்லை" (5:93)** எனும் வசனத்தை அருளினான். (நூல்: முஸ்லிம்)

# ஓலைப்பாயில் உறங்கிய தலைவர்

நபிகள் நாயகத்திற்கு ஆன்மீகத் தலைமையும் ஆட்சித் தலைமையும் ஒருசேரக் கைவந்திருந்த நேரம் அது. ரோமானிய தேசத்தின் பாரசீக சாம்ராஜ்யத்தின் வெளிப்பகட்டு அரண்மனை அலங்காரங்கள், அரசவை பந்தோபஸ்துகள் போன்றவற்றை எல்லாம் பார்த்து அதே போன்ற அலங்காரமும், ஆடம்பரமும் இஸ்லாமிய அரசுக்கும் தேவை என்கிற சிந்தனை நபித்தோழர்களுக்கும் ஏற்பட்டிருந்தது. ஆகையால் இறைத்தூதர் அவர்கள் ரோமானிய கைசர்களைப் போன்று பாரசீகப் பேரரசர்களைப் போன்று நல்லதொரு வசதியான வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடாதா? என்று அடிக்கடி சிந்திக்கத் தலைப்பட்டார்கள்.

ஏதோ ஒரு காரியத்திற்காக ஒரு முறை நபிகளாரின் நெருங்கிய தோழர் உமர் இப்னு ஃகத்தாப் அவர்கள் இறைத்தூதரின் அறைக்குள் நுழைந்தார்கள். உள்ளே பார்த்தால், தவிர்க்க முடியாத அத்தியாவசியத் தேவைகளுக்கான ஒரு சில பொருட்கள் மட்டுமே காணப்பட்டன. பேரீச்ச மரத்து இலைகள் நிரப்பப்பட்ட தோலினாலான தலையணை ஒன்றின் மீது இறைத்தூதர் சாய்ந்திருந்தார்கள். கிழிந்து போயிருந்த ஈச்ச மரத்துப்பாய் ஒன்றின் மீது படுத்திருந்தார்கள். பட்டை பட்டையாக பாயின் சுவடுகள் முதுகில் படிந்திருந்தன.

தன்னுடைய கண்களை அங்குமிங்குமாக உமர் ஓட்டிப் பார்த்தார். காய்ந்து போன ஒன்றிரண்டு தோல் உறைகளைத் தவிர்த்து வேறு எந்தவிதமான வீட்டு உபயோகப் பொருட்களும் அங்கு காணப்படவில்லை. ஓரிடத்தில் ஒரு மூலையில் கொஞ்சம் கோதுமை குவிந்து கிடந்தது.

உமருடைய கண்கள் கசிந்து கண்ணீரை உகுக்கலாயின. "எதற்காக கண்ணீர் சிந்துகிறீர்கள்?" என்று இறைத்தூதர் கேட்டார்கள். "இறைத்தூதர் அவர்களே! அழாமல் எப்படி இருக்க முடியும்? படுக்கையில்லாததால் தாங்கள் பாயில் படுத்துள்ளீர்கள். பாயின் சுவடுகளோ தங்கள் முதுகில் பளிச்சிடுகின்றன. இதோ தங்களிடம் இருக்கின்ற ஒட்டுமொத்தப் பொருட்களையும் என் கண்களால் பார்த்துக் கொண்டுள்ளேன். இன்னொரு பக்கம் அங்கே கைசரும், கிஸ்ராவும் வசதியோடும், ஆடம்பரமாகவும் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டுள்ளார்கள். தாங்களோ இறைவனின் தூதராகவும் இருக்கிறீர்கள்!" என்று கூறினார் உமர் (ரலி)

"அவர்கள் உலகைப் பெற்றுக் கொள்ளட்டும். நாம் மறுமையை அனுபவிப்போம் என்கிற உணர்வு உங்களுக்குத் தோன்றவில்லையா உமரே?" என்று இறைத்தூதர் கேட்டார்கள். (புகாரி, முஸ்லிம்)

# இறை தண்டனையைப் பெற்றுத்தரும் மது!

இந்தக் குறுகிய தற்காலிக வாழ்க்கையை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக்கூடமாகவும் படைத்துள்ள இறைவன் கற்பிக்கும் ஏவல்விலக்கல்களை ஏற்று அதன்படி வாழ்வோர் இவ்வுலகிலும் நிம்மதியாக வாழலாம். மறுமை வாழ்விலும் மோட்சத்தை - சொர்க்கத்தை அடைவார்கள். அந்த இறைவன் நம்மிடம் எவற்றை செய்யுமாறு பணிக்கிறானோ அவையே நன்மைகள் அல்லது புண்ணியங்கள். எவற்றை செய்யாதே என்று தடுக்கிறானோ அவையே தீமைகள் அல்லது பாவங்கள் எனப்படும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் இறைவன் தனது ஏவல்விலக்கல்களை அந்தந்த காலகட்டங்களில் வந்த இறைத்தூதர்கள் மூலமாக மக்களுக்கு அறிவித்து வந்துள்ளான். அந்த இறைத்தூதர்கள் வரிசையில் இறுதியாக வந்த முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இன்று நாம் வாழும் காலகட்டத்திற்க்காக வந்தவர் ஆவார். அவர் மூலமாக அருளப்பட்ட இறை வார்த்தைகளின் தொகுப்பான திருக்குர்ஆனும் அவரது நன்மொழிகளின் தொகுப்பான நபிமொழிகளும் இன்றைய மனிதன் பேணவேண்டிய ஏவல்விலக்கல்களை தெளிவாக நமக்கு எடுத்துரைக்கின்றன. நாளை மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று இதன் அடிப்படையில்தான் நமது பாவபுண்ணியங்கள் எடைபோடப்பட உள்ளன. இறைவன் விதித்த வரம்புகளை மீறி செய்யப்படும் பாவங்கள் மறுமையில் கடும் தண்டனைகளை பெற்றுத்தருபவையாக உள்ளன.

## மதுவும் போதைப்பொருட்களும் ஹராம்

அந்த இறைவன் தரும் அளவுகோலின்படி மதுவும் மற்ற போதைப்பொருட்களும் முழுக்க தடை செய்யப்பட்டவையாகும்..

இறைவன் தன் திருமறையில் கூறுகிறான்:

- **“(நபியே!) மதுபானத்தையும், சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர் நீர் கூறும் “அவ்விரண்டிலும் பெரும் பாவம் இருக்கிறது மனிதர்களுக்கு (அவற்றில் சில) பலன்களுமுண்டு ஆனால் அவ்விரண்டிலும் உள்ள பாவம் அவ்விரண்டிலும் உள்ள பலனைவிடப் பெரிது.” (அல்குர்ஆன் 2:219)**

- **”நம்பிக்கை கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்கச் செயல்களிலுள்ளவையாகும்: ஆகவே இவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்.” (திருக்குர்ஆன் 5:90)**

- நபி (ஸல்) அவர்கள் “போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் ஹராம் (விலக்கப்பட்டது) ஆகும்” என்று கூறினார்கள் என்று அபூ மூஸா அல் அஷ்அரீ(ரலி) அறிவிக்கிறார். (புகாரி: 4343)

- இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: மது பானத்தையும், அதைப் பருகுபவரையும், பிறருக்கு பருகக் கொடுப்பவரையும்,

· அதை விற்பவரையும், அதை வாங்குபவரையும், அதை (பிறருக்கு) தயார் செய்து கொடுப்பவரையும், (தானே) தயார் செய்து கொள்பவரையும், அதைச் சுமந்து செல்பவரையும், யாருக்காக அது சுமந்து செல்லப்படுகிறதோ அவரையும் இறைவன் சபிக்கிறான் என்று கூறினார்கள். (அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) நூல்: இப்னு மாஜா)

● போதைப் பொருளை அருந்துபவர்களுக்கு மறுமையில் நரகவாசிகளின் வேர்வை அல்லது நரகவாசிகளிடம் பிழிந்தெடுக்கப்பட்ட பானம் புகட்டப்படும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஜாபிர்(ரலி) - நூல்: முஸ்லிம்)

## தண்டிப்பது அரசின் கடமை

மதுவை தீமைகளின் தாய் என்று கண்டித்து தடை செய்ததோடு மட்டுமல்லாமல் அதன் தீமைகளில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க ஒரு நடைமுறை சாத்தியமான தீர்வையும் நபிகள் நாயகம் கூறிச் சென்றார்கள். அதை மதீனாவில் அரசாட்சி கைவந்தபோது நடைமுறைப்படுத்தவும் செய்தார்கள். அது என்ன?

இதோ நபிகளாரின் ஆட்சியின்போது நடந்த சம்பவங்களில் ஒன்று இது:

● நுஜமான் என்பவர் மது குடித்த நிலையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வீடுகளில் இருந்தவர்களுக்கு (அவரைஅடிக்குமாறு) கட்டளையிட்டார்கள். மக்கள் அவரைக் கைகளாலும் பேரித்த மர மட்டையாலும், செருப்புகளாலும் அடித்தார்கள். அவரை அடித்தவர்களில் நானும் ஒருவன். அறிவிப்பவர்: உக்பது பின் அல்ஹாரிஸ் (ரலி) (ஆதார நூல்: அஹ்மத் 18610)

மதுவிலக்கை அமுல்ப்படுத்துவதோடு பொதுமக்களுக்கு முன் குடித்த நிலையில் வருபவர்களுக்கு உடனடி தண்டனை வழங்க ஏற்பாடு செய்தால் யாராவது அதற்குத் துணிவார்களா? பாதிக்கப்படும் மக்களுக்கு குடிமகன்களை தண்டிக்கும் அதிகாரத்தைக் கொடுத்து அதை சட்டபூர்வமாக்கலாம். இதை தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பினால் நாடே இதுகுறித்து விழிப்புணர்வு பெறும் என்பதில் ஐயம் இல்லை.

ஆக, நல்லொழுக்கம் மிக்க குடிமக்களை உருவாக்குவதற்கு அவர்கள் மனங்களில் முறையான இறையச்சம் விதைக்கவேண்டும். அதில் நிலைத்திருக்க படைத்த இறைவனுக்கு அனுதினமும் நன்றிகூறும் வழிபாட்டை கற்பிக்கவேண்டும். அவர்கள் தங்கள் அன்றாடப் பொறுப்புகளை நிறைவேற்ற தடையாக நிற்கும் மதுவை அருந்தினால் இம்மையிலும் மறுமையிலும் உண்டாகும் தீமைகள் குறித்து எச்சரிக்கவேண்டும். அவற்றை மீறுவோரின் தீமைகளில் இருந்து பொதுமக்களைக் காக்க அக்குற்றவாளிகளை உடனடியாக தண்டிக்கும் பொறுப்பை பொதுமக்களிடமே ஒப்படைத்து அதை சட்டபூர்வமாக்க வேண்டும்.

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, No.501, 3rd cross, Syed Block, AS palya, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# மது மற்றும் போதைப் பிரியர்கள் கவனத்திற்கு...

நீங்கள் எந்த மதத்தை, நாட்டை, இனத்தை, நிறத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் இருந்தாலும் சரி.. உண்மை இதுதான்.. இதை யாரும் மறுக்கமுடியாது.

இது நம்மைப் படைத்த இறைவனுக்கு சொந்தமான உலகம். இங்கு நமது குறுகிய தற்காலிக வாழ்க்கை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக்கூடமாகவும் படைக்கப் பட்டுள்ளது. இதில் இறைவன் நம்மிடம் எவற்றை ஏவுகிறானோ அவை நமக்கும் மனித குலத்திற்கும் நன்மை பயப்பவை. அவற்றை செய்தால் அவை புண்ணியங்களாக இறைவனிடம் பதிவு செய்யப்படுகின்றன. எவற்றை செய்யக்கூடாது என்று நம்மைத் தடுக்கிறானோ அவை நமக்கும் மனிதகுலத்திற்கும் தீங்கு விளைவிப்பவை. அவையே பாவங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. எனவே இந்த வாழ்க்கைப் பரீட்சையில் வென்று மறுமையில் சொர்க்கத்தை நமது நிரந்தர வாழ்விடமாக அடையவேண்டுமானால் நாம் அவனது எவல்விலக்கல்களை பேணியே ஆகவேண்டும்.

இந்த வாழ்க்கைப் பரீட்சையில் இறைவனால் தடை செய்யப்பட்ட மது மற்றும் போதைப்பொருட்கள் மனிதனின் தனிநபர் வாழ்க்கைக்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் அளப்பரிய தீங்கு விளைவிப்பவை நாம் அனைவரும் அறிவோம்.

அவனது தடையை மீறி அவற்றை அருந்துவதால் மனிதனுக்கு இங்கு உண்டாகும் தீமைகளை விட மறுமையில் உண்டாகக்கூடிய வேதனைகளும் நரகத்து தண்டனைகளும் அதிபயங்கரமானவை.

- **7:41 அவர்களுக்கு நரகத்தில் (நெருப்பு) விரிப்புகளும் (போர்த்திக் கொள்வதற்கு) அவர்களுக்கு மேலே நெருப்புப் போர்வைகளும் உண்டு - இன்னும் இவ்வாறே அநியாயம் செய்பவர்களுக்கு நாம் கூலி கொடுப்போம்.**
- **78:21 நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. வரம்பு மீறியவர்களுக்குத் தங்குமிடமாக! அதில் அவர்கள் பல யுகங்களாகத் தங்கியிருக்கும் நிலையில். அவர்கள் அதில் குளிர்ச்சியையோ குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள்!...... கொதிக்கும் நீரையும் சீழையும் தவிர.!**

**அற்பமான தற்காலிக வாழ்கை**

இன்று நாம் வாழும் தற்காலிக வாழ்கை என்பது மறுமையோடு ஒப்பிடும்போது மிகமிக அற்பமானதே. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

- **இறைவன் மீதாணையாக! மறுமையோடு ஒப்பிடும்போது இவ்வுலகின் நிலையானது, உங்களில் ஒருவர் தமது இந்த அதாவது சுட்டு விரலை கடலில் வைப்பதைப் போன்றுதான். அதில் எந்த அளவு தண்ணீர் ஒட்டிக்கொள்கிறது என்று அவர் பார்க்கட்டும். (நூல் :முஸ்லிம் 5490)**


இங்கு மனிதன் செய்யும் அத்துமீறல்கள் ஒவ்வொன்றும் தவறாமல் பலவகைகளில் பதிவாகின்றன. இன்று எங்கும் கண்காணிப்புக்காக பொருத்தப்படும் **CCTV** கேமராக்கள் பதிவு செய்கின்றனவோ அதைப்போலவே நம் ஒவ்வொருவரது கண்களும் காதுகளும் தோல்களும் நமது நடவடிக்கைகளை இயற்கையாகவே பதிவு செய்து கொண்டிருக்கின்றன. வேறு பலவகையிலும் நமது செயல்களின் பதிவுகள் நடந்து கொண்டிருந்தாலும் இவை ஒன்றே போதுமானவையாக இருக்கும் என்பதை நாம் அறியலாம்.




# நமது வினைப் பதிவு இயந்திரங்கள்

இன்று நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் காது, கண், தோல் இவற்றை மறைத்துக்கொண்டு செய்ய முடியாது. இந்த உணர்வு நம்மில் எப்போதும் இருக்குமானால் நம்மைப் பாவங்கள் அண்ட வாய்ப்பில்லை.


● **மேலும், இறைவனின் பகைவர்கள் (நரகத்)தீயின் பால் ஒன்று திரட்டப்படும் நாளில், அவர்கள் (தனித் தனியாகப்) பிரிக்கப் படுவார்கள். இறுதியில், அவர்கள் (அத்தீயை) அடையும் போது, அவர்களுக்கு எதிராக அவர்களுடைய காதுகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய தோல்களும் அவை செய்து கொண்டிருந்தவை பற்றி சாட்சி கூறும். (திருக்குர்ஆன் 41:19,20)**



ஆம், மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனோடு ஒட்டி உறவாடிக் கொண்டிருப்பவை அவனுடைய காதுகளும் கண்களும் தோல்களும். ஒலி அலைகள் காதுகளால் ஏற்கப்படுவதையும் ஒளி அலைகள் கண்களால் ஏற்கப்படுவதையும் அவற்றை உரிய இடங்களில் பதிவு செய்வதையும் இன்றைய அறிவியல் நமக்கு சொல்லித் தருகிறது. இவற்றோடு தோல்களும் நம் செயல்பாடுகளின் பதிவுகளைத் தாங்கி நிற்கின்றன என்பது மேற்படி வசனம் எச்சரிக்கிறது. இறுதித்தீர்ப்பு நாளன்று விசாரணையின்போது அவை மனிதனைக் காட்டிக்கொடுக்கும்போது அங்கு நடக்கும் உரையாடலைப் படம்பிடித்துக் கட்டுகிறான் இறைவன்:



● **41:21 அவர்கள் தம் தோல்களை நோக்கி, "எங்களுக்கு எதிராக நீங்கள் ஏன் சாட்சி கூறினீர்கள்?" என்று கேட்பார்கள் அதற்கு அவை: "எல்லாப் பொருட்களையும் பேசும் படிச் செய்யும் அல்லாஹ்வே, எங்களைப் பேசும்படிச் செய்தான். அவன்தான் உங்களை முதல் தடவையும் படைத்தான் பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள்" என்று கூறும்.**



● **41:22 "உங்கள் காதுகளும், உங்கள் கண்களும், உங்கள் தோல்களும், உங்களுக்கு எதிராகச் சாட்சி சொல்லாமலிருக்கும் பொருட்டு, உ(ங்கள் பாவ)ங்களை நீங்கள் மறைத்துக் கொள்ள வில்லை. அன்றியும், நீங்கள் செய்து கொண்டிருந்தவற்றில் மிகுதமானதை நிச்சயமாக அல்லாஹ் அறியமாட்டான் என்று நீங்கள் எண்ணிக்கொண்டீர்கள்.**

● **41:23. ஆகவே, உங்கள் இறைவனைப் பற்றி நீங்கள் எண்ணிய உங்களுடைய (தவறான) இந்த எண்ணம்தான் உங்களை அழித்து விட்டது ஆகவே நீங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிட்டீர்கள்" (என்றும் அவை கூறும்).**